மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதற்காக 80 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பீடு தயாரித்திருக்கிறார்கள். இன்னும் டீடெய்ல்டு எஸ்டிமேட்ஸ் தயாரிக்கப்படவில்லை. தயாரிக்கப்படவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி பரிசீலனை முடிந்தபிறகு தொடங்கப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, அடையாற்றிலே போட் கிளப் ஒன்று இருக்கிறது. அந்த போட் கிளப்பிற்கு வேண்டிய தண்ணீர் ஆழமாக அந்த இடத்தில் இல்லாததால் கரைக்குப் பக்கத்திலே போட்கள் சென்றுவிடுகின்றன. அதையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி விரிவுபடுத்த அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுவும் இதிலே அடங்கும். அந்த போட் கிளப்பிற்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

காலாம்பட்டிக்கருகில் புதிய குளம்

*363 வினா— திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுக்கா—காலாம் பட்டிக்கு அருகில் புதிய குளம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது தல அதிகாரிகளின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிய குளங்கள், புதிய குட்டைகள் அமைக்கவேண்டுமென்றால் அந்தத் திட்டம் லாபகரமான திட்டமாக இருக்கிறதா என்று பார்த்து செய்யப்படுகிறது. குட்டைத் திட்டமாக இருந்தால் 1,500 ரூபாயும், குளமாக இருந்தால் 3,000 ரூபாயும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குளமாக இருந்தால் 5,000 ரூபாய் என்றும், குட்டையாக இருந்தால் 3,000 ரூபாய் என்றும் மாற்றுவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, புதிய திட்டமொன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை அளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்கள். சிக்கனமான திட்டமா இல்லையா என்று பார்ப்பதைவிட அது எந்தப் பகுதியிலே வருகிறதோ அந்தப் பகுதி பிற்பட்ட பகுதியாக இருக்கிறதா என்று பார்த்து அப்படியிருந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல்தான் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவரும்.

1975 மார்ச் 18]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த காலாம்பட்டிக்கு அருகில் குளம் அமைக்கின்ற வேலை நீண்டநெடுங்காலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சிறிய திட்டத்திற்கு ஏன் இவ்வளவு கால தாமதம் ஆகிறது? இனிமேலாவது விரைவிலே செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுவரையில் சிக்கனமற்ற திட்டம் என்று அதை ஒத்திவைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின் படி அந்த திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம், அதற்கு 2.10 லட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, புதிய ஏரிகள், புதிய குட்டைகள் கட்டுவதற்கு பொறியாளர்கள் திட்டம் தயாரிக்கிறார்கள். அவர்கள் தயாரிப்பதற்கு எத்தனை நாட்கள், எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திட்டம் தயாரிப்பதற்கு எத்தனை ஆண்டுகள், எத்தனை மாதங்கள் என்று கணக்கு இல்லை. இன்வெஸ்டிகேஷன் நடந்து ஆய்வுகள் நடைபெறுவதுதான் இப்பொழுது. முக்கியமாக தாமதத்திற்குக் காரணம் பணம் பற்றாக்குறையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது முதலமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு சிறந்த யோசனையைப்பற்றி சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில்பட்டி தாலுக்கா போன்றவை மிகவும் வறட்சியான பகுதிகள் ஆகும். அந்தப் பகுதிகளிலே அதிகமான குளங்களை அமைக்கவேண்டுமென்ற முறையிலே 7,8 வருஷங்களாக பேப்பர்கள் பெண்டிங் ஆக இருக்கிறது. வறட்சிப் பகுதியிலே ஸ்பெஷல் ஸ்கீம் என்ற அடிப்படையிலே இப்படிப்பட்ட கண்மாய்களை துரிதமாக அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதுதான் நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு ஆராய்ந்து நிதி வசதிக்கேற்ப எது மிக மிகப் பிற்பட்ட பகுதி என்று பார்த்து அவற்றிற்கெல்லாம் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்யாவசியப் பண்டங்கள் பதுக்கல்

*364 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974–75-ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய அவசியப் பண்டங்களை பதுக்கியதற்காக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?